[illegible]

[illegible]

[illegible] அக் 24, 2002

V211,31'P02
P02.31
224318

வெளியீடு 15-11-2002

Issued 15-11-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, அக்டோபர் 24, 2002 – தொகுதி 31 – எண் 1

Thursday the 24th October, 2002 – Volume 31 – No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009

விலை ரூ. 3.00]

[Price Rs. 3.00

24-10-2002

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| | iii -vii |
| ஆளுநரும் அமைச்சரவையும் | ix - xii |
| Governor and Council of Ministers | xiii - xvi |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii - xxvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | - |
| 1. இரங்கற் குறிப்புகள்— முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 1 - 2 |
| 2. இரங்கல் தீர்மானங்கள்— | |
| (அ) திரு. பி.டி. ஜாட்டி, இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் மற்றும் முன்னாள் தற்காலிக குடியரசுத் தலைவர் அவர்கள் மறைவு | 3 |
| (ஆ) திரு. கிருஷ்ண காந்த், இந்திய குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் மறைவு | 3 - 4 |
| 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 4 - 13 |

5. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:

சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

8. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால்:

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

9. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

10. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224378
சென்னை-600 008
நூலகம்



11. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

12. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

13. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல், குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

15. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:

வணிக வரிகள்.

16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. மோகன்:

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

17. உள்ளாட்சி,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:

கால்நடை பராமரிப்பு.

19. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

20. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வ.து. நடராசன்:

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



21. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

24. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:

மீன்வளம்.

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

– – –

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| **2. Minister for Public Works & Prohibition and Excise** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption and Prisons. |
| **3. Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies |
| **4. Minister for Education** | .. | **The Hon. Dr. M. Thambidurai:**<br>Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| **5. Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law, Courts and Information Technology. |

**6. Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

**7. Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

**8. Minister for Co-operation, Food, Civil Supplies & Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

**9. Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

**10. Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

**11. Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

**12. Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.



**13. Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

**14. Minister for Electricity, Industries and Rural Industries** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional energy development, Industries, Iron & Steel Control, Mines & Minerals, Electronics, Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi and Village Industries Board.

**15. Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Commercial Taxes.

**16. Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests & Environment and Pollution Control.

**17. Minister for Local Administration, Housing & Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority.

**18. Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. (விடுப்பு) | .. குழு அலுவலர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | |
|---|---|
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |

திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. .. தலைமை நிருபர்
திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. .. சார்புச் செயலாளர்
திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
திருமதி சி. நிர்மலா, பி.காம். .. தலைமை நிருபர்
திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

---



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அண்ணாதுரை, திரு. செ. .. ஜெயங்கொண்டம்
3. அண்ணாமலை, திரு. கு. .. தென்காசி
4. அண்ணாவி, திரு. ப. .. தொட்டியம்
5. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
6. அய்யாறு வாண்டையார், திரு. கே. .. திருவையாறு
7. அரசன், திரு. ப. .. அறந்தாங்கி
8. அருணாசலம், திரு. அ. .. வரகூர் (செ.வ.)
9. அருள், திரு. பி.எஸ். .. புவனகிரி
10. அழகம்மாள், திருமதி வி. .. தலைவாசல் (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. ஆகு.சி. .. பெரணமல்லூர்
13. அன்பழகன், திரு. கு. .. நிலக்கோட்டை (செ.வ.)
14. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
15. அன்பழகன், திரு. ஜெ. .. தியாகராய நகர்
16. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
17. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
18. அன்வர் ராஜா, திரு. அ. .. இராமநாதபுரம்
19. ஆண்டிவேல், திரு. ப. .. வேடசந்தூர்

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ... சாத்தூர்
32. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை
33. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. - அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆவா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
49. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ)
58. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆவா.)
61. கனகதாரா, செல்வி. சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. - சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
72. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)



90. சாமி, திரு. ஆர். - மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என் - கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
112. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்

113. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
122. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
127 தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. - காட்பாடி
132. துரைராஜ, திரு. சி. - சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
134. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி



136. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
137. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி - போளூர்
141. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி

| | | |
|---|---|---|
| 158. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | - கடலாடி |
| 159. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | - தொண்டாமுத்தூர் |
| 160. | பாலசுப்ரமணியன், திரு. கே.கே. | - ஸ்ரீரங்கம் |
| 161. | பாலபாரதி, செல்வி. க. | - திண்டுக்கல் |
| 162. | பாலன், திரு. எஸ்.எம். | - லால்குடி |
| 163. | பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | - சேரன்மகாதேவி |
| 164. | பிச்சாண்டி, திரு. கு. | - திருவண்ணாமலை |
| 165. | புகழேந்தி, திரு. இ. | - கடலூர் |
| 166. | பூபதி மாரியப்பன், திருமதி | - வலங்கைமான் (செ.வ.) |
| 167. | பூவராகமூர்த்தி, திரு. ஏ. | - அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 168. | பெருமாள், திரு. என்.கே. | - விளாத்திகுளம் |
| 169. | பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 170. | பொன்னம்பலம், திரு. ப. | - சமயநல்லூர் (செ.வ.) |
| 171. | பொன்னையன், திரு. சி. | - திருச்செங்கோடு |
| 172. | போளூர் வரதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 173. | மகாலிங்கம், திரு. எஸ். | - அவினாசி (செ.வ.) |
| 174. | மகேந்திரன், திரு. கே. | - பெரம்பூர் (செ.வ.) |
| 175. | மகேஸ்வரி, திருமதி எஸ். | - கோயம்புத்தூர் மேற்கு |
| 176. | மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 177. | மணி, திரு. டி. | - விளவங்கோடு |
| 178. | மணி, திரு. ஜி.கே. | - பெண்ணாகரம் |
| 179. | மணி நாடார், திரு. எஸ்.எஸ். | - சாத்தான்குளம் |
| 180. | மலையப்பசாமி, திரு. அ.இரா. | - கபிலர்மலை |



| | | |
|---|---|---|
| 181. | மல்லிகா சின்னசாமி, திருமதி | - முசிறி |
| 182. | மாணிக்கராஜ், திரு. எஸ். | - நாங்குநேரி |
| 183. | மில்லர், திரு. அ. | - கூடலூர் |
| 184. | முரளிதரன், திரு. கே.வி. | - தளி |
| 185. | முருகவேல் ராஜன், திரு. க. | - வந்தவாசி (செ.வ.) |
| 186. | முருகேசன், திரு. ஆகு. | - ஆத்தூர் |
| 187. | முனுசாமி, திரு. கா.பூ. | - காவேரிப்பட்டினம் |
| 188. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | - பாளையங்கோட்டை |
| 189. | மோகன், திரு. ப. | - சின்னசேலம் |
| 190. | யசோதா, திருமதி டி. | - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 191. | ரங்கநாதன், திரு. ப. | - புரசைவாக்கம் |
| 192. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | - பட்டுக்கோட்டை |
| 193. | ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | - கோபிசெட்டிப்பாளையம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. எம். | - திருமயம் |
| 195. | ராதாரவி, திரு. | - சைதாப்பேட்டை |
| 196. | ராமராஜ், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 197. | ராம்குமார், திரு. எம். | - பாபநாசம் |
| 198. | ராஜகோபால், திரு. ஆ. | - சிவகாசி |
| 199. | ராஜம்மாள், திருமதி எஸ். | - தூத்துக்குடி |
| 200. | ராஜா, திரு. எச். | - காரைக்குடி |
| 201. | ராஜாங்கம், திரு. வி.ஆர். | - சோழவந்தான் |
| 202. | ராஜு, திரு. எச்.எம். | - உதகமண்டலம் |
| 203 | ரெங்கநாதன், திரு. என். | - பூம்புகார் |
| 204. | ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | - பேரூர் |

| | | |
|---|---|---|
| 205. | லட்சுமணன், திரு. வி.கே. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 206. | லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. அரவக்குறிச்சி |
| 207. | வடிவேலு, திரு. ஆர். | .. வாணியம்பாடி |
| 208. | வளர்மதி, திருமதி பா. | - ஆலந்தூர் |
| 209. | வளர்மதி ஜெபராஜ், திருமதி | - மதுரை மேற்கு |
| 210. | வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 211. | வாசுதேவன், திரு. பெ. | - மதுராந்தகம் |
| 212. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 213. | வில்வநாதன், திரு. இரா. | - சோளிங்கர் |
| 214. | விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | - பூங்கா நகர் |
| 215. | விஜயபாஸ்கர், டாக்டர் சி. | - புதுக்கோட்டை |
| 216. | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | - பனமரத்துப்பட்டி |
| 217. | வீரபாண்டியன், திரு. ஜெக. | - மயிலாடுதுறை |
| 218. | வெங்கடாசலம், திரு. அ. | - ஆலங்குடி |
| 219. | வெங்கடாஜலம், திரு. செ. | - சேலம்-I |
| 220. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 221. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 222. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 223. | வேல் முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 224. | வைதியலிங்கம், திரு. மீ.அ. | - தாம்பரம் |
| 225. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 226. | ஜீவானந்தம், திரு. இரா. | - நாகப்பட்டினம் |



| | | |
|---|---|---|
| 227. | ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |
| 228. | ஜெயக்குமார், திரு. கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 230. | ஜெயராமன், திரு. வி. | - பொள்ளாச்சி |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 233. | ஹக்கீம், திரு. எம்.ஏ. | - மதுரை மத்தி |
| 234. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - திருவட்டாறு |
| 235. | சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | - (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 8, சித்ரபானு – திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 அக்டோபர் 24, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே

உடம்போ டுயிரிடை நட்பு"

உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவு முட்டைக்கும் பறவைக் குஞ்சுக்கும் உண்டான உறவு போன்றதுதான்.

## 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. சி. மன்னியப்பன் அவர்கள் 31-12-2001 அன்றும், திரு. வி. பழனிவேல் அவர்கள் 15-05-2002 அன்றும், திரு. கோ. பாரதிமோகன் அவர்கள் 19-05-2002 அன்றும், திரு. டி. கர்சா கவுடர் அவர்கள் 22-05-2002 அன்றும், திரு. கி. சட்டநாத கரையாளர் அவர்கள் 14-6-2002 அன்றும், திரு. கோ. இளங்கோ அவர்கள் 14-08-2002 அன்றும், திரு. கோ. சண்முகம் அவர்கள் 21-09-2002 அன்றும், திரு. ச.க. சுப்பிரமணியம் அவர்கள் 19-10-2002 அன்றும் மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. மன்னியப்பன் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை கிருஷ்ணகிரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வி. பழனிவேல் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கோ. பாரதிமோகன் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை குத்தாலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. டி. கர்சா கவுடர் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை உதகமண்டலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றியுள்ளார்.

திரு. கி. சட்டநாத கரையாளர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையிலும் மீண்டும் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் தென்காசி தொகுதியிலிருந்து இரு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

திரு. கோ. இளங்கோ அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை அவினாசி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கோ. சண்முகம் அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செம்மையாகப் பணியாற்றியுள்ளார்.

திரு. ச.க. சுப்பிரமணியம் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை சத்தியமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்களுடைய மறைவினால் அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*





## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) திரு. பி.டி. ஜாட்டி, இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் மற்றும் முன்னாள் தற்காலிக குடியரசுத் தலைவர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.டி. ஜாட்டி, இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் மற்றும் முன்னாள் தற்காலிக குடியரசுத் தலைவர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்.

"இந்தியத் திருநாட்டின் சுதந்திரப் போராட்ட தியாகியும், இளம் வயது முதலே பொதுவாழ்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவரும், நலிந்த மக்களின் நலன்களுக்காக அரும்பாடுபட்டவரும், மைசூர் மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும், புதுச்சேரி, ஒரிசா மாநிலங்களின் முன்னாள் ஆளுநரும், 1974 ஆம் ஆண்டு முதல் 1979 வரை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகவும், 1977 ஆம் ஆண்டில் தற்காலிக இந்தியக் குடியரசுத் தலைவராகவும் பணியாற்றிய திரு. பி.டி. ஜாட்டி அவர்கள் 7-6-2002 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

*முற்பகல் 10-05*

### (ஆ) திரு. கிருஷ்ண காந்த், இந்திய குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. கிருஷ்ன காந்த், இந்திய குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்.

"இந்தியத் திருநாட்டின் முதுபெரும் தேசியவாதியும், சுதந்திரப் போராட்ட வீரரும், பேச்சாற்றல், எழுத்தாற்றல் மிக்கவரும், விஞ்ஞானியாக வாழ்க்கையைத் தொடங்கி சிறந்த முறையில் சமுதாயப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவரும், மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும், ஆந்திர மாநில ஆளுநராகவும், 1996 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் 1997 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள்

வரை இம்மாநிலத்தின் தற்காலிக ஆளுநராகவும், 1997 ஆம் ஆண்டு முதல் தனது இறுதிக் காலம் வரை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகவும் சீரிய முறையில் பணியாற்றிய திரு. கிருஷ்ண காந்த் அவர்கள் 27-7-2002 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (25-10-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்தல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, அனைத்து வடிவிலான கொண்டைக் கடலையைப் பொறுத்தவரையில், தருமபுரி மாவட்டத்தை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 26-3-2002 ஆம் நாளிட்ட 86ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]







2. சென்னை, பெருநகர் வளர்ச்சி பகுதியைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் பேருந்து செல்லாத கிராம பகுதிகளில் (Unserved Rural Areas) இயக்கப்படும் மினி பஸ்களுக்கு அதன் உரிமையாளர்கள் செலுத்தும் வரியினை 1-4-2002 முதல் ஒரு காலாண்டிற்கு ஒரு இருக்கைக்கு ரூ.360/- லிருந்து ரூ.250/- ஆக குறைப்பது குறித்து உள் துறையின் 28-3-2002 ஆம் நாளிட்ட 279 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 20-6-2001 ஆம் நாளிட்ட 112 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் துறையின் 19-3-2002 ஆம் நாளிட்ட 233 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் துறையின் 17-1-2001 ஆம் நாளிட்ட 46 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னிஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 18.2.2002-ஆம் நாளிட்ட 51 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை மதுக்கூடம்) விதிகள் வகுப்பது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 23-4-2002 ஆம் நாளிட்ட 113 ஆம் எண் அரசாணையில்

வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 2-1-2002 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் துறையின் 3-12-2001 ஆம் நாளிட்ட 1195 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 59/1988) 212(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30-6-2001 ஆம் நாளிட்ட 119 ஆம் எண் அரசாணையில் . வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 17-7-2001 ஆம் நாளிட்ட 129 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

12. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12-6-2002 ஆம் நாளிட்ட 119 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]





13. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30-6-2001 ஆம் நாளிட்ட 120 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

14. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (நுண்ணறிவுத்திறன் தொழில், வணிகத்தொழில், மரபுத்தொழில், பணித்தொழில் ஆகியவற்றிற்காக வரி வசூலித்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 20-11-2001 ஆம் நாளிட்ட 143 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

15. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/2000) 1.3.2002 அன்று முதற்கொண்டு செயலுக்கு வருமென அறிவிப்பது குறித்து உள் (போ.I) துறையின் 28-1-2002 ஆம் நாளிட்ட 73 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

16. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் (போ.I) துறையின் 28-1-2002 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2002 அக்டோபர் 24

17. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச்(பூசல்களை தீர்வு செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 17/2002) 2002 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என்று அறிவிப்பது குறித்தும், வணிக வரிகள் ஆணையாளரை, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (பூசல்களை தீர்வு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/2002) 8 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் உள்ள நோக்கங்களுக்கான அதிகார மன்றமாக நியமிப்பது குறித்தும் மற்றும் வணிகவரிகள் துணை ஆணையாளரை, அவருடைய அதிகார வரம்புக்குட்பட்ட யாதொரு வணிகரைப் பொறுத்தமட்டில், பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பாக நியமிப்பது குறித்தும் வணிகவரிகள் துறையின் 27-6-2002 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (பூசல்களை தீர்வு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/2002) 15(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

18. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1999) 21-9-2001 அன்று முதற்கொண்டு செயலுக்கு வருமென அறிவிப்பது குறித்து வருவாய்த் துறையின் 21-9-2001 ஆம் நாளிட்ட 365-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1999) 26(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

19. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் விதிகள் இயற்றுவது குறித்து வருவாய்த் துறையின் 21-9-2001 ஆம் நாளிட்ட 366 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1999) 26(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. வணிகவரிகள் துறையின் 12-1-1999 ஆம் நாளன்று உருவாகி, பின்னர் திருத்தப்பட்டவாறான 12-1-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட 11(2) /CT/ 11(1-2)/99 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 3-4-2002 ஆம் நாளிட்ட 40 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளில் மோட்டார் வண்டிகள் நுழைவதற்கான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



2002 அக்டோபர் 24]

21. 30-11-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிகவரிகள் துறையின் 11(2) /வ.வ/892 (இ4)2001 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தங்கள் செய்தது குறித்தும் மற்றும் 27-3-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிகவரிகள் துறையின் 11(2) /வ.வ/313(சி4)2002 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்தும் வணிகவரிகள் துறையின் 5-4-2002 ஆம் நாளிட்ட 45 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் பொருட்களை கொண்டு வருவதற்கு நுழைவு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

22. வணிகவரிகள் துறையின் 2-9-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள 6-8-1998 ஆம் நாளிட்ட 11(1) /வ.வ/ 126/ 98 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 6-3-2002 ஆம் நாளிட்ட 19 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

23. 'அந்த்யோதயா அன்ன யோஜனா', 'மதிய உணவு', 'அன்னபூர்ணா' 'சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம்', ஆகிய திட்டங்களின்கீழ் செய்யப்படும் அரிசி விற்பனை குறித்தும், ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செய்யப்படும் கோதுமை விற்பனை குறித்தும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், சென்னை இந்திய உணவுக் கழகம் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 13-5-2002 ஆம் நாளிட்ட 50 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

24. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 24-7-2001 ஆம் நாளிட்ட 263 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1983 ஆம் ஆண்டு

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

25. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து உள்(போக்குவரத்து VII) துறையின் 18-7-2001 ஆம் நாளிட்ட 673 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

26. 27/1, லஷ்மிபுரம், குறுக்குச்சாலை, கரூர் என்னும் முகவரியிலுள்ள பெரியசாமி என்பவரின் மகனாகிய பெ. முருகன் என்பவருக்குச் சொந்தமான எம்.டி.எஸ்.5869 எண் கொண்ட சரக்கு வண்டியைப் பொறுத்தமட்டில் 1-4-1993 முதல் 31-3-1994 வரையிலான காலத்தில் காலாண்டுகளுக்கான வரி நிலுவைத்தொகை ரூ.20,280/- (ரூபாய் இருபதாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்) அதாவது வரி பாக்கித்தொகை ரூ.6,760/- மற்றும் அபராதத்தொகை ரூ.13,520/-ம் வசூலிக்க இயலாதவை என்று தள்ளுபடி செய்தல் குறித்து உள்(போ.I) துறையின் 18-6-2002 ஆம் நாளிட்ட 513 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

27. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 22-6-2001 ஆம் நாளிட்ட 115 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

28. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் அதிகாரம் பெறாமல் முறைப்படுத்துதல் அல்லது வளர்ச்சி மாறுபாடு மற்றும் கட்டட கட்டுமானம்) விதிகள் இயற்றியது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 4-6-2002 ஆம் நாளிட்ட 69 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு,

D
V211,31'862 P02.31



1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

29. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு. [1948 ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் “மக்கள் சாசனம்” (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2002).

3. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2002).

4. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் உரிமையியல் வழக்குகள் மதிப்பீடு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2002).

5. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2002)

6. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2002)

7. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் உரிமையியல் வழக்குகள் மதிப்பீடு (திருத்த) செய[illegible] அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்[illegible] எண் 7/2002).

224378
சென்னை-600 009

[2002 அக்டோபர் 24

*8. திருச்சி, நடுப்பட்டில் உள்ள மணிகண்டம் ஊராட்சி கல்வி மற்றும் கிராம வளர்ச்சி சங்கம் தயாரித்து விற்பனை செய்யும் கையுறைகள், துணித்தொப்பிகள், ஊறுகாய்கள், நார்பொருட்கள், கோரை, கண்ணாடி பொருட்கள், ஏ.டி.வி. வண்டிகள், பழரசம் ஆகிய பொருட்களுக்கு, 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) படி, வரி எதுவும் செலுத்த வேண்டியதில்லை என ஆணையிடுவது குறித்து வணிகவரிகள் துறையின் 6-3-2002 ஆம் நாளிட்ட 19 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.*

*9. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2002).*

*10. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்ற தடை அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2002).,*

*11. இறக்குமதி செய்யப்பட்ட சில மூலப் பொருள்களிலிருந்து அல்லது பாகங்களிலிருந்து வணிகர் ஒருவர் மாநிலத்திற்குள் தயாரித்த யாதொரு பொருளின் பன்மாநில விற்பனை குறித்து அவர் செலுத்தத்தக்க வரியை, அப்பொருளின் நுழைவின் பேரில் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருள்களின் நுழைவு மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) கீழ் செலுத்திய நுழைவு வரிக்குச் சமமான அளவுக்குத் திருப்பிச் செலுத்துவது இல்லாமல் குறைப்பது பொது நலனுக்கு அவசியம் என்று தெளிவடைந்ததன் பேரில், அவ்வாறு வரியைக் குறைக்க வேண்டுமென்று இதனால் கட்டளையிடுகிறார். ஆனால் அத்தகைய குறைப்பானது, தயாரிக்கப்பட்ட பொருள்களின் பன்மாநில விற்பனை குறித்து செலுத்தத்தக்க வரியில் 50 சதவீதத்திற்கு மேற்படக்கூடாது. மேலும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட பொருள்களின் ஏற்றுமதியைப் பொறுத்தமட்டில் இக்குறைப்பு மேற்சொன்ன 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் செலுத்தத்தக்க வரியில் 100 சதவீதம் வரை (செலுத்துவது இல்லாமல்) இருக்க வேண்டும் என்பது குறித்தும் மற்றும் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருள்களின் நுழைவு மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு பொருள் மேற்சொன்ன 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருள்களின் நுழைவு மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) கீழ் எந்த வடிவில் இறக்குமதி செய்யப்பட்டதோ அதே வடிவில் மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்ய வரும்பொழுது செலுத்தத்தக்க வரியை செலுத்தப்பட்ட நுழைவு வரி தொகைக்குச் சமமான அளவுக்குக்*



2002 அக்டோபர் 24]

*குறைப்பது, பொது நலனுக்கு அவசியம் என்று தெளிவடைவதால், அவ்வாறு வரியைக் குறைக்க வேண்டுமென்று கட்டளையிடுவது குறித்தும் வணிகவரிகள் துறையின் 1-7-2002 ஆம் நாளிட்ட 83 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.*

*12. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்த) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/2002).*

*13. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருவள்ளுவர் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/2002).*

*14. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/2002).*

224378

அரசு மைய அச்சகம், சென்னை–600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.